உழைக்கும் வர்க்கத்தின்
உற்ற நண்பன்
ஈஸ்டன் சைக்கிள்
EASTERN CYCLE
ஆடவர், மகளிர் பாடல்கள்
தாராளமாகக் கிடைக்கும்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 புரட்டாதி 26 ஜ ல்கஸ்: 9 இதழ்: 243
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12-10 78

முட்களுடன் முட்களில்லாமல்
CITIZEN சிற்றிசன்
கைக்கடிகாரங்கள்
சுவர், மேசை
மணிக்கூடுகள்
தாராளமாகக் கிடைக்கும்
நேரடி இறக்குமதியாளர்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284.

# வேலைநிறுத்தம் செய்ய

# 51வீத ஆதரவு தேவை

## வெளிநாடுகளில் தொழில்செய்வோர்க்கு பாதுகாப்பளிக்க புதுசட்டம் வருகிறது

### முகவர், நிலையங்கள் பதிவுசெய்யவேண்டும்

(கொழும்பு)

தொழில்நிலையங்களில் வேலைநிறுத்தம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமானால் 51 சதவிகித உறுப்பினர்கள் சாதகமாக வாக்களித்தால் மாத்திரமே வேலை நிறுத்தத்தில் இறங்க முடியும்.

இதுவும் தொழில் ஆணையாளரின்தலைமையில் நடைபெறும் ஊழியர் சபைக் கூட்டங்களில் இரகசிய வாக்கெடுப்பின் மூலமே தீர்மானிக்கப்படும்.

இத்தகவலை நேற்றுத் தொழிலமைச்சின் செயலாளர் திரு. ஏ. பி. தலகுண தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஒரு செய்தியாளர் மாநாட்டில் திரு தலகுண தொழிலாளர் தொடர்பான அரசின் வெள்ளை அறிக்கைபற்றி விளக்குகையில் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

இதுவரை காலமும் தொழிலாளர்களல்லாத தொழிற்சங்கத் தலைவர்களினாலேயே வேலைநிறுத்தங்கள் பற்றிய முடிவு எடுக்கப்பட்டுவந்ததாகவும், இனிமேல் தொழிலாளர்களே இதனைத் தீர்மானிக்கும் நிலைமை ஏற்படுமென்றும் அவர் சொன்னார்.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்கள் தேடிக்கொடுப்பதாகக்கூறி மோசடிகள் நடத்தும் முகவர் நிலையங்களுக்கு எதிராகசட்டநடவடிக்கை எடுக்கவும், தொழில்தேடி வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் புதிய சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுவருவதாகவும் அவர் கூறினார்.

முகவர் நிலையங்கள் வெளிநாடுகளில் வேலை தேடிக் கொடுப்பதாக விளம்பரம் செய்வதற்குமுன்னர் தொழில் திணைக்களத்தில் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்றும் திரு. தலகுணதெரிவித்தார். (ம)

## 'அமிர்' வரும்வரை நியமனம் இல்லை?

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நாடு திரும்பும் வரையில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகியவற்றுக்கான மாவட்ட அமைச்சர்களின் நியமனத்தை அரசு ஒத்திவைக்கத் தீர்மானித்திருப்பதாக நம்பகமாகத் தெரிய வருகிறது. (ம)

## தொலைபேசி மூலம்

### அமிர்-சிவா ஆலோசனை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு, அ. அமிர்தலிங்கம் நேற்று கலிபோர்னியாவிலிருந்து தொலைபேசிமூலம் தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்துடன் பேசினார்.

இலங்கை அரசியல் நிலைமை பற்றி இருவரும் கருத்துப் பரிமாறிக்கொண்டதாகத் தெரிகின்றது.

திரு. அமிர்தலிங்கம் அடுத்த மாதம் 10ம் திகதியளவிலேயே இலங்கை திரும்புவார் என்று இப்போது தெரிகிறது.

அமெரிக்காவிலிருக்கும்அவர் 16ம் திகதி கனடாவுக்கும் பின்னர் புதுடில்லிக்கும் செல்வார். தாயகம் திரும்புகையில் தமிழ்நாட்டிலும் சில தினங்கள் தங்குவார். (ம)

## நாவற்குழி வீடுகள்

### வெவ்வேறு சிறுபான்மை சமூகத்துக்கு வழங்கப்படும்

(மட்டுவில்)

"அரசின் ஓராண்டு பூர்த்தியானதைக் குறிக்குமுகமாக நாவற்குளியில் அமைக்கப்பட்ட சுயஉதவித்திட்ட ஐந்து வீடுகளும் ஐந்து வெவ்வேறு சிறுபான்மைச் சமூகத்தினருக்கே வழங்கப்படும்.

இத்தகவலை சாவகச்சேரி எம். பி. யும், தமிழர் விடுதலைக்கூட்டணி தீண்டாமை ஒழிப்புக் குழுத்தலைவருமான திரு. வி என். நவரத்தினம் தெரிவித்தார்.

கட்டிடவேலைகள் கடந்த

(6-ம் பக்கம் பார்க்க)

## சிங்களவரை துரத்துவதாக விஞ்ஞாபனம் கூறவில்லை

### இரா. சம்பந்தன் தொடர்ந்து சாட்சியம்

(திருகோணமலை)

தமிழ் ஈழம் அமைந்தால் அங்கே வசிக்கும் சிங்கள மக்கள் பூரணபாதுகாப்பு அளிக்கப்பட்டு பேணப்படுவார்கள். அவர்கள் துரத்தப்படுவார்கள் என்று தமிழா விடுதலைக் கூட்டணியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்படவில்லை என்று திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில்

[5-ம் பக்கம் பார்க்க]

50 ஆண்டு சேவையின் தொடர்ச்சியாக
மீண்டும்
புதிய இடத்தில்
இன்று (12-10-78) முதல் ஆரம்பம்
R. CHELLIAH & Co.,
( FORD DEALERS )
No. 281/A, STANLEY ROAD, JAFFNA.
எல்லாவிதமான மோட்டார் உதிரிப் பாகங்களும்
மலிவு விலையில் பெறக்கூடிய ஒரே இடம்.
ஆர். செல்லையா அன் கோ,
(ஃபோர்ட் டீலர்ஸ்)
இல. 281/A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (0551)



## வரி விளம்பரம்

### பயிற்சி

வெளிநாடுகளிலும், கப்பல்களிலும் வேலைகள் பெற நவீன வெளிநாட்டு முறையில் தொழிற்பயிற்சிகள். வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், Radio Officers P M G Certificate, City & Guilds (Electrical) முதலியன. ஆங்கிலமும், St. John's Ambulance முதலுதவிப் பயிற்சியும் இலவசமாகக் கற்பிக்கப்படும். National Institutes 57, 59. யாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 0489

மூன்று மாத மின்னியல் டிப்ளோமா ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு 16-10-78க்கு முன் தொடர்பு கொள்ளவும். அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B, மொம்சாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 0513

### தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் ஒரு வீடும் நாவற்குளியில் வீடுகட்ட காணியும் தேவை. வே. நடராசா, சட்டத்தரணி, நெடுங்குளம்வீதி, யாழ்ப்பாணம். 0553

## வேலணை கிராமசபை கேள்வி அறிவித்தல்

வேலை விபரம்:
சந்தை கட்டிட வேலை

வேலணை கிராமச்சபை விசேட ஆணையாளரால் மேற்குறிப்பிட்ட வேலை செய்வதற்கு சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ம் திகதி காலை 9-30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 17-10-1978 பி. ப. 3-30 வரை வழங்கப்படும். கேள்விப்பணம் ரூபா 100/-ம் பத்திரப்பணம் ரூபா 10/-ம் கட்டியதன் பேரில் உத்தியோக பூர்வமான கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்வி கேட்க விரும்புவோர் தாமோர் ஒப்பந்தகாரனென்பதையும் அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

மேலதிக விபரங்கள் ஏதும் அறிய விரும்பின் வேலணை கிராமசபை காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

இப்படிக்கு
நன்றியுள்ள
ஒடபம்:
கே. சி. லோகேஸ்வரன்
விசேட ஆணையாளர்
கிராமசபை-வேலணை

கிராமசபை
வேலணை
9-10-78 0552

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்
சுன்னாகம் காலஞ்சென்ற நாகமணி இராசசிங்கம் பெண் சிவஞானேஸ்வரி என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்.

- மரணமெய்தியவர்.

விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம் அல்லது சுப்பிரமணியம் - சுன்னாகம்.

- மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 13.

எதிராக

1. சுப்பிரமணியம் பெண் சிரோன்மணி-சுன்னாகம்.
2. நமசிவாயம் திருநாவுக்கரசு.
3. நமசிவாயம் சுந்தரமூர்த்தி - பன்னாலை, தெல்லிப்பழை.
4. நமசிவாயம் வாதவூரர் அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
5. நாகமணி சிவப்பிரகாசம் கந்தளாய்.
6. நாகமணி பாலசிங்கம்.
7. நாகமணி பாலசுப்பிரமணியம் - அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
8. நாகமணி குணரத்தினம் கிளிநொச்சி.
9. வெற்றிவேலு தம்பித்துரையும் பெண்.
10. தனலட்சுமியும் இருவரும் அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

-எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற கட்டளைப்படி

றி. ஜெயராசசிங்கம்.
பதிவாளர்

1978ம் ஆண்டு ஆடி மாதம் 31ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
என்னால் எழுதப்பட்டது.

செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
0546

## குடியேற்றவாசிகள் உண்ணாவிரதமிருப்பர்

(உடையார்கட்டு)

உடையார்கட்டுக் குடியேற்றத்திட்டத்தில் நடந்துள்ளதாகக் கூறப்படும் நில, நீர் ஆக்கிரமிப்புகளை ஆட்சேபித்து வவனியா அரசாங்க அதிபர் செயலகத்தின்முன் குடியேற்றவாசிகள் இம்மாதம் 16ம் தேதி ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருக்கவுள்ளனர்.

அன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த உண்ணாவிரதத்தில், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்வார்கள்.

உடையார்கட்டு சட்ட விரோத குடியேற்றக்காரர்களால், ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக குடியேற்ற வாசிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத தண்ணீர்ப் பாவனை ஏற்பட்டதால் இப்பகுதியில் சிறுபோக விளைவு பாதிக்கப்பட்டதென்றும், அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-அ)

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 26-ந் திகதி
வியாழக்கிழமை
(12-10-78)

**மேடம்:-** பிரிவின் தாக்குதல் வேதனையைத்தரும். தொழில்துறையிலும் பின் தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமுண்டு, நிதானம் வேண்டும்.

**இடபம்:-** கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். தாய்வழிச் செய்தியும் கிடைக்கலாம், தொழில் புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும் சுபதினம்.

**மிதுனம்:-** அதிஷ்டகரமான தினம். வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும். இரக்கச் சிந்தனையின்மூலம் பொருட்ச் செலவாகும், மகிழ்ச்சிக்கிடமுண்டு.

**கடகம்:-** உறவாடிக் கெடுப்பதற்குப் பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். சிலருக்கு உஷ்ண ரோகச் சம்பந்தமான நோய் ஏற்படும்.

**சிங்கம்:-** குடும்பவாழ்க்கை இன்று சுகமாக இருக்கும். தூரத்து. உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார். தொழில் துறையிலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு.

**கன்னி:-** உறவு முறைகளில் பிழைகள் தென்படும். அபாயகாரியங்களில் ஈடுபடாது இருக்கவும். இனத்தவர்களுடன் பகைத்துக் கொள்ளுவீர்கள்.

**துலாம்:-** இன்று முன்னணியில் நிற்பீர்கள். பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நிருவாக உத்தியோகஸ்தர்களில் செல்வாக்கு வளர்பிறையாகும்.

**விருச்சிகம்:-** முயற்சியால் உயர்ச்சியுண்டு. பணவிவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும். வீட்டில் சுபகருமங்கள் நடைபெறுவதற்கிடமுண்டு. சுகபோகநாள்.

**தனுசு:-** புதுமையான சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு அதிஷ்ட லாபமுண்டு விருந்தினர் வருகை, உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**மகரம்:-** பல வழிகளிலும் தொல்லைகள் தோன்றும். விரக்தி மனப்பான்மையுடன் நடமாடுவீர்கள். தொழில் புரியும் இடத்தில் எதிரிகள் மறைமுக நடவடிக்கைகளில் இறங்குவர். அவதானம் வேண்டும்.

**கும்பம்:-** அவசர முடிவின்மூலம் விரோதத்தை தேடிக் கொள்வீர்கள், சிலர் துதிபாடிக்கொண்டே துரோகச் செயலில் ஈடுபடுவார்கள். அமைதிநன்று.

**மீனம்:-** மனைவாழ்வில் மகிழ்ச்சிக்கிடமுண்டு. குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும். வருமானத்திலும் உயர்ச்சிக்கிடமுண்டு. புதுமனை கட்டுவதற்கும் சிலர் ஆலோசிக்கலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் வேலைக்கு சீல் வைத்த கேள்வி விண்ணப்பங்கள் 23-10-78-ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்பும் பதிவு செய்த கொந்தராத்துக்காரர் கேள்விப் பிணைப்பணமாக ரூபா 50/-ம் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 15/-ம் 19-10-78-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணி வரை இக் காரியாலயத்தில் கட்டி கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை வட்டுக்கோட்டைக் கிராமாட்சி மன்றப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலை விபரம்

1. சித்தங்கேணிப் பிள்ளையார் கோவிலில் இருந்து துறட்டிப்பனை அம்மன் கோவிலுக்குப் போகும் வீதி.
2. கலைநகர் வீதி.
3. தாவளை ஓடக்கரை வீதி.

மு. சுப்பிரமணியம்
நிர்வாகஸ்தர்,
கிராமசபைப் பிரதேசம்,
வட்டுக்கோட்டை.
கிராமாட்சி மன்றப் பணிமனை,
வட்டுக்கோட்டை. 0557

## முக்கிய அறிவித்தல்

வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
**தேர்த்திருவிழா**

14-10-1978 சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகிறோம்.

தர்மகர்த்தா சபையினர்.
0548

## யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவைச் சமாசம்

### தேவை

கணக்கு எழுதுநர் தரம் 2

சம்பளம்:- ரூபா 180 — 304 / 6×10—8×8

தகைமைகள்:-

1. கணக்கியல் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரணம்)ச் சித்தி அல்லது
2. கணக்கியல் திறமைச் சித்தியுடன்கூடிய கூட்டுறவு வேலையாளர் (சாதாரண) தராதரப்பத்திரம், கணக்கியலில் அல்லது வர்த்தக எண்கணிதத்தில் அல்லது எண்கணிதத்தில் திறமைச் சித்தியுடன் கூடிய க. பொ. த. ப. (சாதாரண) இனையுடைய விண்ணப்பகாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது:- 25—45

பொது எழுதுநர் தரம் 2

சம்பளம்:- ரூபா 200 — 340 / 8×10—10×6

தகைமைகள்:-

1. 6 பாடங்களுடன் கூடிய க. பொ. த. ப. (சாதாரணமும்) இரண்டுவருடகால அனுபவமும், அல்லது,
2. க. பொ. த. ப (சாதாரணம்) 6 பாடங்கள் இவற்றுள் இரண்டு பாடங்கள் வர்த்தகம், வர்த்தக எண்கணிதம் அல்லது பொருளாதாரவியலாக இருத்தல் வேண்டும்.
3. பொது எழுதுநர் பதவிகள் தரம் 3ல் இரண்டு வருடகால அனுபவம்.

வயது:- 25—45

கப்பல் இறக்குமதி, ஏற்றுமதி சேவையில் அனுபவம் உள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் தலைவர், யாழ். மாவட்ட கூட்டுறவுத்துறைமுகச் சேவைச் சமாசம், 25 முன் வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு 17-10-78ம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
0555 யா. மா. கூ. து. சே. சமாசம்.

## ஹொண்டா - HONDA

### மோட்டோர் சைக்கிள்கள்
### MOTOR CYCLES

ஜப்பானிலிருந்து "றீக்கொண்டிஷன்" செய்யப்பட்டு, இலங்கையில வேறு எங்கும் பெறமுடியாத மலிவு விலையில் சொற்ப முற்பணத்துடன் விநியோகம் செய்யப்படும் :

உங்கள் ஆடர்களை இன்றே பதிவு செய்து கொள்ளவும்.

விலை விபரம் :

| | | | |
|---|---|---|---|
| CD 125 | — | 1974/75 | 8500/- |
| CD 125 | — | 1972/73 | 7700/- |
| CB 125 K 3 | — | 1972/73 | 7500/- |
| CB 125 K 5 | — | 1974/75 | 9000/- |
| CB 125 T | — | 1976/77 | 12500/- |

தொடர்பு கொள்க :

**பெ. நடராசா**

96, நெடுங்குளம் வீதி, (தொலைபேசி : 513) யாழ்ப்பாணம். 0554

ஈழநாடு
The-Eelanaadu

## தோட்டங்களில் சமசம்பளம்

தோட்டத் தொழிலாளர் ஆண் - பெண் இரு பாலாருக்கும் சமசம்பளம் வழங்குவது தொடர்பாக வெள்ளையறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பிராட்மன் வீரக்கோன் பத்திரிகை நிருபர்களிடம் கூறியிருக்கிறார்.

சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய இனத்தவர்களான தொழிலாளர்கள் தாயகம் திரும்புவதனுல் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்குதோட்டங்களில் ஏற்பட்டுவரும் பற்றுக்குறை பற்றியும் திரு. திரு. பிராட்மன் வீரக்கோன் எடுத்துக்கூறியிருக்கிறார்.

கிராமப் பகுதிகளிலிருந்து தோட்டங்களில் வேலைக்கு வரும் சிங்களத் தொழிலாளர்கள் குறிப்பிட்ட சில பருவங்களில் மாத்திரமே தோட்டங்களில் வேலை செய்கின்றார்கள். கிராமங்களில் விவசாய வேலைகள் ஆரம்பித்தவுடன் தோட்டங்களுக்கு வருவதை நிறுத்தி விடுகிறார்கள் மேலும் தூரஇடங்களிலிருந்துஇவர்கள் தோட்டங்களுக்கு வந்து செல்வதிலும் சிரமமிருக்கிறது.

இதேசமயம் தோட்டங்களிலேயே தங்கி வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைமையும் இன்னமும் சீராகவில்லை.

அவர்களின் சிறுவர் பராமரிப்பு, கல்வி, சுகாதார வசதி, கலைகலாச்சார வளர்ச்சி, போக்குவரத்துக் கஷ்டங்கள் மற்றும் பொருளாதார சீர்கேடு போன்ற இன்னேரன்ன பிரச்சினைகளுக்கு அரசு தீர்வுகாண வேண்டும்.

தோட்டங்களில் வாழ்க்கை நிலைமை சீராகி சிறப்படையும் பட்சத்தில், கிராமியத் தொழிலாளர்களும் சீராக தொழிலுக்கு வரக்கூடும், ஏன், தோட்டங்களிலேயே அவர்கள் குடியிருக்கவும் விரும்பலாம்! இதனல் அரசு விரும்புவது போல்சமூக ஒருமைப்பாடு ஏற்படவும் வழி பிறக்கும்.

எனவே முதலில் தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி செய்தல் வேண்டும். இதன்மூலம் இவர்கள்மத்தியில் நிலவும் விரக்தி உணர்வு ஒழியும். தொழில்துறையில் இவர்கள் அதிக அக்கறை கொண்டு உழைக்கவும் செய்வார்கள். மேலும் பிற இடங்களிலிருந்துவரும் தொழிலாளர்களை போன்று இவர்களும் வேறு இடங்களுக்கு வசதியான தொழில் தேடிப்போகும் நிலையும் மாறும்.

இதற்கெல்லாம் முதற்படியாக ஆண், பெண் இரு பாலாருக்கும் தயக்கமின்றி சம சம்பளம் வழங்குவது வரவேற்கத்தக்கது. பெண்கள் பெரும்பாலும் தேயிலை கொய்யும் வேலைகளைத்தான் செய்கிறார்கள் ஏனைய கடின வேலைகளையெல்லாம் ஆண் தொழிலாளர்களே செய்கிறார்கள் என்பது நொண்டிக் காரணமாகும். ஏனெனில் பெண் தொழிலாளர்கள் கொய்யும் தேயிலையை நம்பித்தான் தோட்டத் தொழில்துறையே செயல் படுகின்றது, மேலும் ஆண்களைப் போலன்றி குழந்தை பராமரிப்பு போன்ற குடும்ப வேலைகளையும் இவர்களே கவனிக்க வேண்டியுள்ளது. அத்துடன் ஆண்களைப் போலன்றி அதிகாலை தொடக்கம் மாலை வரையில் இவர்களிடம் தோட்டத்தில் வேலை வாங்கப்படுகின்றது.

இந்த நிலைமையில் சம சம்பளம் வழங்குவதில் தயக்கம் காட்டுவதில் அர்த்தமில்லை,

சமசம்பளக் கோரிக்கையை முன்வைத்துப் போராடிய ஒரு தொழிற்சங்கத்தின் பிரதிநிதியான திரு. எஸ். தொண்டமான் அமைச்சரவையில் அங்கம் வகிப்பதால் இந்த விஷயத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு திருப்திதரும் விதத்தில் விரைவில் நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

---

# "முன்னாள் பிரதமர் பண்டாரநாயகா கோணேசர் ஆலயத்திற்கு காணிவழங்க மறுத்தார்

## சன்சோனிக்கமிஷன்முன் திருமலை எம்.பி.

(திருகோணமலை)

"1956ம் ஆண்டு கோணேஸ்வரர் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டது. முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற எஸ் டபிள்யூ. ஆர் டி பண்டாரநாயக்கா இவ்வாலயத்திற்கெனக் காணி வழங்க மறுத்துள்ளார்." இவ்வாறு திருகோணமலை எம். பி. திரு இரா. சம்பந்தன் சன்சோனிக் கமிஷன்முன் சிங்கள மகாஜனப் பெரமுனை சட்டத்தரணிகளால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறினார்:

### கேள்விப்படாத செய்தி

குறுக்கு விசாரணையின் போது அவர் தொடர்ந்து கூறியதாவது!-

"திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய கோட்டைக்குள் அரசமரமொன்றிருந்து அது வெட்டப்பட்டுவிட்டது என்ற செய்தியை இதுவரை நான் கேள்விப்பட்டதில்லை,

திருகோணமலை மாவட்டத்தில் சிற்சில இடங்களில் பௌத்த விகாரைகள் இருக்கின்றன. அப்பகுதிகளில் சிங்களவரும் வாழ்கின்றனர். ஏனைய பகுதிகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். மேலும் சில பகுதிகள் காடுகளாகக் காட்சியளிக்கின்றன

### ஆதாரமில்லை

கோணேஸ்வரர் கோட்டை வளவுக்குள் அரசமரம் ஒன்றிருந்ததற்கான ஆதாரம் எதுவுமில்லை.

1624ம் ஆண்டு போர்த்துக்கேயர் கோணேஸ்வரர் ஆலயக் கோட்டையை நிறுவினர். இதற்கான வரலாற்றுச் சான்றுகள், தகவல்களுள்ளன அரசமரம்பற்றி எதுவும் ஆதாரம் இல்லை.

கி. மு. 1300ம் ஆண்டில் கோணேஸ்வரர் ஆலயம் அமைக்கப்பட்டது. போர்த்துக்கேயர்காலத்தில் இவ்வாலயம் அழிக்கப்பட்டது. மீண்டும் 1951ம்—1952ம் ஆண்டுகளில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

விராங்கர் என்ற இடத்தில் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இவை சிவபெருமான், பார்வதி உள்ளிட்டு இதர இந்துக் கடவுள்களின் சிலைகளாகும்.

### பண்டா மறுத்தார்

1956ம் ஆண்டு கோணேஸ்வரர் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டது. முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா இவ்வாலயத்திற்கென காணி வழங்க மறுத்துள்ளார்.

### தமிழரின் சமயப்பற்று

திருகோணமலையில் வாழும் தமிழர்கள் சமயப்பற்றுடையவர்கள். அரசமரங்களை வெட்டும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள். பலாத்காரமாகத் தமிழர்கள் அரசமரங்களை வெட்டியதால் தான் இங்கு ஆகஸ்ட் கலவரம் ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது." (உ)

---

## யாழ்.தொகுதி ச. ச. நி. சமாஜம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபை விசேஷ ஆணையாளர் தலைமையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ். தொகுதிச் சனசமூக நிலையங்களின் சமாசத்தின் புதிய நிர்வாகிகள் வருமாறு

தலைவர் பொ. சிவப்பிரகாசம் கொழும்புத்துறை மேற்கு ச. ச. நிலைய உபதலைவர் ஜே. அன்ரனி சன்மார்க்க ஐக்கிய ச. ச. நிலையம் பொதுச்செயலாளர் எஸ். தங்கராஜா றெக்களமேசன் ச. ச. நிலையம் உபசெயலாளர் எஸ். கனகராஜா கண்ணபுரம் ச. ச. நிலையம் பொருளாளர் கே. துரைசிங்கம் திருவள்ளுவர் ச. ச. நிலையம். [உ]

---

## மணிவிளக்கு

தற்புகழ்ச்சியையும் வீண் ஆடம்பரத்தையும் விட்டுவிடு. எளிமையையும் பணிவையும் கொள்.

- சுவாமி சிவானந்த சரஸ்வதி

---

# பலவாறுமுருகன் என் கண்முன்னே தோற்றினன்!

## மணப்பெண்ணாக வள்ளியைக் கண்டேன்

(நேற்றைய தொடர்ச்சி)

வேலைவடிவாகப் பார்த்து முருகனுடைய உண்மையை இறுதியாக அறிந்துகொள்வோமே என்று உள்ளுணர்வு இழுக்க மீண்டும் வெளியே நின்றவர்களுடன் சேர்ந்து நின்று வேலைப்பார்த்தேன். ஒரு நிமிடம்-இரண்டு நிமிடம்... இது வேலாகத்தான் நிற்கப் போகிறதோ என்று இம்முறையும் மனம்சபலிக்கும் அதேநேரத்தில்...

### என்உள்ளம் சிலிர்த்தது

என்உள்ளம் சிலிர்த்துக் கொண்டது! ஆம்... ஆமாம்! வேலினூடே, வேலுடன் வேலாக, வேல் இல்லாமலும் வேலுமிருந்தும், பால முருகனின் அற்புதக்காட்சி! என் பக்கத்தே நின்ற இளைஞர் 'பாத்தீங்களா? முருகன்... குழந்தை முருகன்' என்று குழந்தையைப்போல் என்னிடம் குழைந்தார். புன்முறுவலுடன் தலையை அசைத்து நானும் ஆமோதித்தேன். எனது பிள்ளைகள் இருவரும் அலுப்பினால் தள்ளி ஒரு பக்கத்தில் நின்றிருந்தார்கள். அவர்களை அழைத்துக்காட்டி 'ஏதாவது தெரிகிறதா?' என்று கேட்டேன். அவர்கள் 'இல்லை' என்றனர். 'வடிவாய்ப் பாருங்கோ' என்றேன். சிறிது நேரம் பார்த்தனர். பிறகு 'ஓம், அப்பா சின்ன முருகன் தெரியுது' என்றார்கள். அவர்களை அப்படியே அருகே நிற்க விட்டு விட்டு, நான் மீண்டும் வேலைப்பார்த்தேன். பார்த்துக் கொண்டேயிருந்தேன். பக்கத்தில் நின்ற இளைஞர் 'பால முருகா! குழந்தை முருகா!' என்று . திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு நின்றார். ஆனால்... என்னுடன் இப்பொழுது வேல் விளையாடத் தொடங்கியது. வைத்த கண் வாங்காமல் நான் வேலை விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தேன். பக்கத்திலுள்ளவர்கள் அனைவரையும் மறந்துவிட்டேன். பைத்தியக்காரனைப் போல் வேலையே வெறித்துப் பார்த்தபடி நின்ற எனக்கு, முருகன் சந்நிதியில் தவறிய காட்சிக்குப் பதிலாக, வட்டியும் முதலுமாகச் சேர்த்து, சீவியம் முழுவதும் மறக்கமுடியாத காட்சியை—இல்லை, இல்லை— அனுபவத்தை அளித்துக் கொண்டிருந்தான். அதை என்னோடு, என்னிடம் மட்டும் வைத்துக்கொள்ளுமளவுக்கு நான் சுயநலவாதியல்ல; அப்படி வைத்திருக்க அந்த முருகனும் விடமாட்டான். ஆகவே தான், தமிழ்த்தெய்வமாகிய முருகனுடன் எனக்கு ஏற்பட்ட இந்த அதிஅற்புதத்தை, அவனுடைய குழந்தைகள் அனைவருடனும் பகிர்ந்துகொள்ள முனைந்தேன் விளைவு இக்கட்டுரை, சரி இனிச் சொல்கிறேன் எழுவைதிவு வேல் எனக்கருளிய இனிய காட்சிகளை!

---

எழுவைதீவில் கலியுகக் கந்தன்

---

### பாலமுருகன் குமரனாகி அபயமளித்தான்

பாலகன் குமரனானன். பாலகனைக்காட்சிதந்தபொழுதும், குமரனாகிய பொழுதும் அவனுடைய வலது கரம் 'அபயம்' அளித்தபடி நின்றது. ஆனால், குமரன் தோற்றத்தில் காட்சியளித்தபோது, தனது வலது கரத்தை 'பயப்படாதே' என்று அசைத்த அழகும், நுண்ணியமும் எப்படிச் சொல்வது' திக்பிரமை பிடித்து நின்றேன். 'இப்படி அசைத்தானா?' என்று எனக்கே ஆச்சரியமும், சந்தேகமும் தொடர்ந்து பார்த்தேன். அடுத்து வந்தார் அநுமார். அவர் சிவபூசையில் கரடி மாதிரித்தான் எனக்குத் தோற்றினார். மனிதனின் மனக்குரங்குப் பலவீனம் அதிகமாக என்னைப் பிடித்திருப்பதை முருகன் அவர் மூலம் எனக்குச் சொல்லாமல் சொல்லிக்காட்டுகிறானோ என்று எண்ணத்தோன்றிற்று.

---

மனோகரன்
ம. மயில்வாகனம்

---

### மணப்பெண்ணாக வள்ளிவந்தாள் பச்சைமயில்மீது முருகன்

அடுத்து வந்தது மிகவும் அழகானகாட்சி, வள்ளியம்மை திருமணப் பெண்ணாக கூறைச் சேலையுடன் நாணத்தால் தலைகவிழ, இருகரங்களிலும் பாந்தினை ஏந்தியபடி, பெண்மைக்கே இலக்கணமாக நின்ற காட்சி பின்னர். மீண்டும் அநுமார் அந்தநேரத்தில் மூன்னர் குமரப்பெருமான் வலது கரமசைத்தது பற்றி... என் மனதில் குழம்பிக்கொண்டிருக்க அநுமாரின் இடத்தில் குமரன் மீண்டும் தோன்றிச் சிறிது நேரம்என்னைத்தடுமாற வைத்துவிட்டு, இரண்டாவது தடவையாக நிச்சயமாக எதற்கும் அஞ்சாதே' என்ற வண்ணம் வலது கையை அசைத்தான் அந்த நிமிடமே நான் புறப்பட அனுமதி பெற்றதாகவே எண்ணினேன் ஆனாலும் மனம்கேட்கவில்லை. ஏதோஒரு குறை ஏதோ ஒரு தவிப்பு ஒரு அங்கலாய்ப்பு கடைசித் தடவையாக வேலைப்பார்த்தேன் என்ன அற்புதம் என்மனக் குறைமறைந்தது பின்னுக்கு ஒரே பச்சைநிறத்தில் தோகை விரித்த வண்ணம் நின்ற மயில் மன்னவன் முருகன் பால முருகன் வடிவில் வீற்றிருந்தான்!

போதும்! போதும்! இது போதும்! என்று உடனேயே அங்கிருந்து புறப்பட்டேன். எனக்கருகே நின்ற, இளைஞரும் என் பிள்ளைகளும் முதலில் தோன்றிய பாலமுருகனை மட்டுமே கண்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். வெளியேவந்தபோது, இன்னும் பலர் ஒன்றுமே காணவில்லை என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

ஆகவே, இந்த 'அற்புதம்' அவனவன் உளப்பக்குவத்துக்கு ஏற்றவாறே நடக்கிறது, முருகனல் நடத்தப்படுகிறது என்பதை முற்றுமுழுதாக உணர்ந்து கொண்டேன்.

இதில் எவரும் சங்கடப்பட வேண்டிய அவசியம் இல்லை.

---

## கேதார கௌரி விரதம்

(யாழ்ப்பாணம்)

வல்வை ஸ்ரீவாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தான கேதார கௌரி விரதம் இம்மாதம் 31-ம் திகதி இரவு பூஜை ஆராதனைகளுடன் நடைபெறவிருக்கிறது. (உ)

---

## வருடாந்த பொதுக்கூட்டம்

(உருத்திரபுரம்)

உருத்திரபுரம் சிவாலய பரிபாலனசபை வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. ஆர். செல்லையா தலைமையில் உருத்திரபுரம் சிவாலய மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. [உ]

# றொடீஷிய பிரதமர் சிமித்தை சந்திக்க கார்ட்டர் மறுப்பு

வாஷிங்டன், அக். 11

அமெரிக்காவில் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் றொடீஷியப் பிரதமர் திரு இயன்சிமித்தைச் சந்திக்க அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

றொடீஷியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்பொருட்டு அமெரிக்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக றொடீஷியப் பிரதமரும், கறுப்பு இனத்தவரும் அமெரிக்கா வந்திருந்தனர்.

றொடீஷியப் பிரதமர் அமெரிக்கா வருவதற்கு முதலில் 'விசா' அனுமதி மறுக்கப்பட்டபோதிலும் பின்னர் 'விசா' வழங்கப்பட்டது

றொடீஷியப் பிரச்சினை குறித்து திரு. கார்ட்டருடன் பேச்சுநடத்த திரு. சிமித் விரும்பியிருந்தபோதிலும் திரு. கார்ட்டர் அதற்கு மறுப்புத்தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்புக் குறித்து திரு. கார்ட்டர் கருத்துத் தெரிவிக்கையில்மேலும் கூறியதாவது:

றொடீஷியாவில் ''இரத்தக் களரி'யை முடிவுக்குக் கொண்டுவரவே பிரிட்டனும் அமெரிக்கா விரும்புகிறது. இந்தவேளையில் திரு. சிமித்தை சந்திக்கவேண்டிய அவசியம் இப்போதில்லை

றொடீஷியப் பிரச்சினை றொடீஷியாவிலுள்ள சர்வகட்சிகளின் மாநாடு ஒன்றின்மூலமாக தீர்த்துவைக்கப்படவேண்டும்.

றொடீஷியப் பிரதமர் திரு. சிமித்தின் அமெரிக்க விஜயத்தின்போது, காம்ப்டேவிட் மகாநாடு போன்ற ஒரு மகாநாட்டைத் திரு. கார்ட்டர் கூட்டுவார் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது தெரிந்ததே. (இ)

## அமெரிக்கா-உகண்டா வர்த்தகத் தொடர்பு துண்டிப்பு

வாஷிங்டன், அக். 11

உகண்டாவுடனான அமெரிக்க வர்த்தகத் தொடர்புகளை அமெரிக்கா துண்டித்துள்ளது.

எண்ணை வர்த்தகம் தொடர்பாக உகண்டா கடைப்பிடித்து வரும் கொள்கை காரணமாகவே அமெரிக்கா உகண்டாவுடனான வர்த்தகத் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டதாக அறிவித்துள்ளது. [இ]

## இயன் விஜயத்திற்கு அமெரிக்க அனுமதி: பாதுகாப்புச்சபை கண்டனம்

நியுயோர்க், அக். 11

றொடீஷியப் பிரதமர் திரு இயன்சிமித்தை அமெரிக்காவுக்கு விஜயம்செய்ய அனுமதித்ததை ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை பலமாகக் கண்டித்துள்ளது.

இனத்துவேஷ நடவடிக்கைகளைக் கடைப்பிடித்துவரும் றொடீஷியாவுக்கு எதிரான தடையை மீறி அமெரிக்கா திரு. இயன்சிமித்தை தமது நாட்டில் விஜயம்செய்ய அனுமதித்தமையினாலேயே மேற்கண்டவாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் மேற்படி கண்டனத் தீர்மானத்திற்கு 11 பேர் ஆதரவாக வாக்களித்தனர். (இ)

## மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தியவர் தற்கொலை!

(நெல்லியடி)

ஒருவருடத்தின் முன்னர் திருமணம் செய்து, மனைவியுடன் மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தி வந்த வாலிபர், கர்ப்பிணி மனைவியைத் தவிக்கவிட்டுதற்கொலை செய்து கொண்டார்.

துன்னாலையை சேர்ந்த சி. சின்னததம்பியின் மரணவிசாரணையில் மேற்கண்டவிபரம் தெரியவந்தது.

வடமராட்சி பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் மரண விசாரணை நடத்தினார்.

தமது கணவருக்கு பணக்கஷ்டமோ, எதிரிகளோகிடையாதென்றும், ஒருவரை ஒருவர் மிகவும் நேசித்து வந்ததாகவும், எவ்வித பகையும் இல்லையென்றும், மரணவிசாரணையில் மனைவி தெரிவித்தார்.

சம்பவதினம் காலையில் வெளியில் சென்றவர் மாலை வீடு திரும்பி'மருந்து குடித்துவிட்டேன்' என்று கூறினாரென்றும் அவருக்கு முதலுதவி அளித்தும் அவர் இறந்துவிட்டதாகவும் மனைவி கூறினார்.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. [சு]

## வருடாந்த குருளைச்சாரணர் விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் 1678 ஆண்டு வருடாந்த 'குருளைச் சாரணர் விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் யாழ். பழைய பூங்காவில் நடைபெறவிருக்கிறது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [உ]

[புலோலி]

அம்பன் அரசாங்க வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் தியாகராசா புத்தளத்திற்கு மாற்றம் பெற்றுச் செல்வதையொட்டி இவ்வைத்தியசாலையின் சகல ஊழியர்களும் அவருக்குப் பிரிவுபசாரமளித்தனர். [அ]

## பாண்டிச்சேரி அ.தி.மு.க. அரசிலிருந்து மேலும்ஒருவர்வெளியேற்றம்

### ஆளும் கட்சிக்கு 15 பேர் ஆதரவு

புதுச்சேரி, அக். 11

பாண்டிச்சேரி ஆளும் அ. இ. அ. தி. மு. க. அரசிலிருந்துமேலும் ஒருவர் வெளியேறியுள்ளார்.

திரு. பொன். செல்வராஜ் என்ற அந்த சட்டசபை உறுப்பினர் கட்சியிலிருந்து வெளியேறுவதாக எழுதியுள்ள கடிதத்தை முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. டி. இராமச்சந்திரனும் அவருடன் ஆளும்கட்சியிலிருந்து வெளியேறிய மூன்று உறுப்பினர்களும் லெப்டினன்ட் கவர்னர் திரு. குல்கர்னியிடம் சமர்ப்பித்தனர்.

தாம் இது குறித்து மத்திய உள்துறை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவர உள்ளதாக லெப்டினன்ட் கவர்னர் அவர்களிடம் தெரிவித்தார்.

30 உறுப்பினர் கொண்ட பாண்டிச்சேரி சட்டசபையில் தற்போது 12 அ இ அ தி மு க உறுப்பினர்களே உள்ளனர்.

இவர்களுடன் திரு. எஸ் இராமசாமியின் மந்திரி சபைக்கு காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரும் ஆதரவாக உள்ளனர்.

(அ இ அ தி மு க-காங்கிரஸ்-இந்திய கம்யூனிஸ்ட் கூட்டணியில் தற்போது 15 உறுப்பினர்கள் உள்ளனர். (இ)

## மாணவர்மூலம்சகோதரத்துவ சமுதாயம் மலரவேண்டும்'

-- வடமாநில வித்தியாதிபதி

(யாழ்ப்பாணம்)

''எமது முன்னோர்கள் சமயத்தின் மீது கொண்ட அளவில்லாத பற்றினால் தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் பாடசாலைகளுக்கும் சமய சம்பந்தமான பெயர்களைச் சூட்டினர். இப்பாடசாலைக்கும் அந்தக் கொள்கையைப் பின்பற்றி திருஞான சம்பந்த வித்தியாசாலை எனப் பெயரிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் பாடசாலைகளில் மாணவர்கள் சமத்துவ சமதர்ம சகோதரத்துவ சமுதாய வாழ்வைப் படைக்கக் கூடியமுறையில் கல்விபுகட்டப்படவேண்டும்''.

இவ்வாறு வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலையில் நடைபெற்ற கலைமகள் விசிழாவில்சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அதிபர் திரு. சி. நடேசு தலைமைவகித்தார். ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஆசிரியர் திரு. இ, சிவானந்தம் பேசுகையில் ஒருபாடசாலையின் வளர்ச்சிக்குப் பெற்றோர் ஆசிரியர் மாணவர் கல்விப்பகுதி அதிகாரிகள் ஆகிய நான்கு திறத்தினரும் உதவ வேண்டும். இவர்களுள் ஒருபகுதியினருடைய ஒத்துழைப்பு கிடைக்காவிட்டாலும் பாடசாலை வளர்ச்யடைய முடியாது''.என்றார்.

வலி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சி. குமாரசாமி பேசுகையில் மாணவர்களது ஒழுக்கத்துக்கு வித்திடுவன ஆரம்பபாடசாலைகளே என்று குறிப்பிட்டார்.

ஸ்கந்தவரோதயக்கல்லூரி அதிபர் திரு.சி. தியாகராசா உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு.- க. சிவப்பிரகாசம், வீமன்காமம் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. க. திருநாவுக்கரசு, முன்னாள் தலைமையாசிரியர் திரு. ஆ. தம்பிப்பிள்ளை திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் [குறமகள்] மயிலணி சைவமகா வித்தியாலய அதிபர் வித்துவான் ப.சுப்பையா ஆகியோரும் சிறப்புரை நிகழ்த்தினர்.

"இளம் விவசாயிகள் விழா:

## பெண்கள் பங்குபெற அனுமதியளித்ததுஎப்படி?

### ஆவரங்கால் கழகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இளம் விவசாயக் கழகங்களுக்கு மாத்திரம் நடத்திய பொருட்காட்சியில் பாடசாலைப் பெண்கள் பங்குபற்ற அனுமதி வழங்கியமை குறித்து நடவடிக்கை எடுக்குமாறு ஆவரங்கால் இளம் விவசாயிகள் கழகம் யாழ். விவசாய விரிவாக்க அதிகாரியைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி கழகம் நிறைவேற்றியுள்ள தீர்மானப் பிரதிகள் விவசாய அமைச்சர் உட்பட கோப்பாய் எம். பி, யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

1-10-78ல் நடைபெற்ற யாழ். மாவட்ட இளம் விவசாயக் கழகங்களின் பொருட்காட்சியும், கலைவிழாவும் தொடர்பாக இக்கழகம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் பின்வரும் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இவ்விழாவில் எமது கழகம் கழகம் பங்குபற்றி அதில் காட்சிக்கு வைக்கப்பட்ட பொருட்களுக்கு சிறந்த முறையில் பாதுகாப்பு வசதி செய்யப்படவில்லை. இதனால் பல பொருட்களை வேறு கழகங்கள் மாற்றி எடுக்கக்கூடிய முறையில் பல தில்லுமுல்லுகள் இடம்பெற வாய்ப்பாக விருந்தன. உதாரணம்: நெல் சாமை, கிழங்குவகை முதலியன மேலும் இப்பொருட்களை பொருட்காட்சி முடிந்து திருப்பிக் கொண்டுவந்து வீடு சேர்ப்பதற்கு முன்பு வாக்களித்தபடி போக்குவரத்து வசதி செய்துதரப்படவில்லை. குறிப்பாக இதற்கென நியமிக்கப்பட்ட பொறுப்பதிகாரியை வேறு அதிகாரிகள் பிழையான முறையில் வழிநடத்தி அவர்கள் வாகனத்தைத் தங்கள் சார்பான கருமங்களுக்குப் பயன்படுத்தியதால் எமது கழகத்திற்கு ஏமாற்றமாகமுடிந்தது. பின்பு எமது செலவில் வாகனம் அமர்த்தி பொருட்களை ஏற்றிச் சென்றோம்.

அடுத்ததாக பொருட்காட்சியை குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே முடித்துக்கொண்டார்கள். இளம் விவசாயக் கழகங்களுக்கு மாத்திரம் நடாத்திய பொருட்காட்சியில் விவசாயப் பாடசாலைப் பெண்கள் பங்குபற்ற அனுமதி வழங்கியமை. விவசாய அறிவுப் போட்டியில் எழுத்துப் பரீட்சையில் இறுதித் தேர்வுக்காக 8பேர் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டும் இறுதித் தேர்வில் பங்குபற்றுவதற்கு 16 பேர்களுக்கு அனுமதி வழங்கியமை.

விழா நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற விழா நிகழ்ச்சிகள் பற்றி ஆராயவும் கழகங்களுடன் ஆலோசனை நடத்தாமை.

திட்டமிட்டமிட்டபடி இவ்

(5-ம் பக்கம் பார்க்க)

## இனவேற்றுமைகளை உதட்டளவில் கண்டிப்பதில் அர்த்தமில்லை

### ஐ. நா. வில் இந்திய வெளிநாட்டமைச்சர்

நியுயோர்க், அக். 11

''இனவேற்றுமைகளை உதட்டளவில் கண்டிப்பதில் அர்த்தமில்லை. மனிதப் பண்பற்ற நடவடிக்கையான இனஒதுக்கலை முடிவுக்குக்கொண்டுவர வேண்டிய தமக்குள்ள கடமையை எந்த ஒரு நாடும் இனிமேல் தட்டிக்கழித்துவிட முடியாது''

இவ்வாறு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் ஐக்கியநாடுகள் சபைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

வளரும் நாடுகளுக்கு சிறிதும் உதவிசெய்யாமல் விடும் போக்கை வளர்ந்த நாடுகள், முக்கியமாக வல்லரசுநாடுகள் கைவிடவேண்டும்.

அணுஆயுதக் குறைப்பில் நீண்ட நாட்களாக முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. எனவே மனித குலத்தை அழிவிலிருந்து காப்பாற்ற அணு ஆயுதக்குறைப்பை முற்றுமுழுதாகக் கடைப்பிடிக்க வல்லரசுகள் தாங்கக்கூடாது. அணு ஆயுதங்கள் அபாயகரமானது: அவை அழிக்கப்படவேண்டும். (இ)

# "சாத்வீகமூலம் கடைசிவரை தமிழ் ஈழம் கிடையாது"

[யாழ்ப்பாணம்]

"சாத்வீகம் மூலம் எந்தக் காலத்திலும் தமிழ்ஈழம் பெற முடியாது" என்று கொடிகாமம் ரயில் நிலையத்திற்குச் சமீபத்தில் நடந்த கருத்தரங்கில் பேசுகையில், தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

கொடிகாமம் தமிழ்க்காங்கிரஸ் கிளைத்தலைவர் திரு. எஸ். எம். கமலநாதன் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"சாத்வீகப் போராட்டத்தினால் தமிழ்ஈழம் பெறமுடியும் என யாரும் கூறினால் அது பெரும் ஏமாற்றமாகும். சாத்வீகம், அகிம்சை, அறப்போராட்டம் எல்லாம், தேர்தலுக்குத் தேர்தல், 'சிறை சென்றோம் அடிபட்டோம்' என்றுகூறி எம். பி. பதவிகளை காப்பாற்றுக்கொள்ள உதவுமேயொழிய தமிழ்ஈழம் அமைக்க உதவாது.

"நம் எதிரியின் பலத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டும். எண்ணிக்கையில் அவர்கள் மும்மடங்கு அதிகம். ஏராளமான போர் ஆயுதங்கள்; படைகள் அவர்களிடம் உண்டு இந்த நிலையில் அவர்களை எதிர்த்துப் போராடுவது எப்படி?

## வெளிநாடுகள் உதவுமா?

அப்படியானால் வெளிநாடுகளின் உதவிகளை நாடவேண்டும். அவர்கள் இதுவரை நடத்திய போராட்ட விபரங்களைக் கேட்பார்கள். தமிழினத்தை நசுக்கும் அரசியல் அமைப்புக்கு, விசுவாசம் தெரிவித்துச் சத்தியப்பிரமாணம் எடுத்தோம் என்று வெளிநாட்டவரிடம் நாம் கூறினால் அவர்கள் உதவி கிடைக்குமா? என்பதை இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்.

## ரத்தம் சிந்த வேண்டும்

ரத்தம் சிந்திப்போராட எத்தனை இளைஞர்கள் தயாராக இருக்கிறார்கள்? வேலை தேடிஅலையும் இளைஞர்கள் போராடவருவார்களா இதை எல்லாம் சிந்திக்க வேண்டும். சும்மா அடிக்கடி "தமிழ் ஈழகோரிக்கையை கைவிடோம்' என்று கூறிவிட்டால் போதாது அதற்கான வழி வகைகளை ஆராயவேண்டும்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை பேசுகையில் ஜனாதிபதியின் கலப்புக்குடியேற்றம் தமிழினத்தைப்பயமுறுத்தும் ஒரு செயலாகுமெனக் கூறினார். இதன் மூலம் ஐக்கியத்தைப் ஏற்படுத்த முடியாத தென்றும் அவர் தெரிவித்தார்.

## சுயாட்சிக்கழகத்துடன் சேரவும்தயார்

தமிழ் ஈழ லட்சியத்திலும் போராட்ட திட்டத்திலும் ஒரே கருத்து ஏற்பட்டால் தமிழர் சுயாட்சிக்கழகத்துடன் தமிழ்க்காங்கிரஸ் சேர்ந்து இயங்கத்தயங்காது என்றும் உண்மையாகவும் நேர்மையாகவும் தமிழ்ஈழ லட்சியத்திற்குப்பாடுபடும் எந்தக்கட்சியுடனும் சேர்ந்து போராட தயங்காது என்றும் அவர் கூறினார். [க-அ[

---

பருத்தித்துறை கொள்ளை வழக்கு:

# சந்தேகநபர்கள் மூவர் ஒப்புதல் வாக்குமூலம்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மகளிர் கல்லூரி ஆசிரியைகள் சம்பள பணம் கொள்ளை தொடர்பாக ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ள 11 சந்தேக நபர்களில் மூவர் ஒப்புதல் வாக்குமூலமளிக்க விருப்பதாக, பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் இவ்வழக்கு எடுக்கப்பட்டபோது 10 சந்தேக நபர்கள் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] ஆர். ஸ்ரீ சிவாயா, ஆர். பரமகுரு. எம். வேலும்மயிலும், சிவாபாலேந்திரா, என். கிருஷ்ணராசா, கே. இரத்தினசிங்கம், திருமதி அருச்சுனா, எஸ். இராமச்சந்திரன், வி. அருமைநாயகம், எம். ராசகுலேந்திரன், வி. யோகசிகாமணி அ. சிறிதரன் ஆகியோர் ஆஜரானார்கள். பொலிஸ் தரப்பில் பருத்தித்துறை சப்இன்ஸ்பெக்டர் ஜெய சேகரா ஆஜரானார்.

11 வது சந்தேகநபர் கோர்ட்டிற்கு கொண்டுவரப்படவில்லையென்றும் அவர் அனுராதபுரம் சிறைச்சாலையில் இருப்பதாகவும், அவர் தொடர்பான அடையாள அணிவகுப்பு நடத்துவதுபற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென்றும், இன்ஸ்பெக்டர் ஜெயசேகரா தெரிவித்தார்.

3 சந்தேக நபர்கள் நீதவானுக்கு வாக்குமூலம் அளிக்க விருப்பதாக விண்ணப்பம் ஒன்று பொலிசாரால் சமர்ப்பிக்கப்பட்டது.

சந்தேக நபர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் என்னவெனப் பொலிசாரால் தெரிவிக்கவில்லைஎன சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்லம் கூறிய போது இன்னும் சில சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட விருப்பதாக சப்இன்ஸ்பெக்டர் ஜெயசேகரா கூறினார்.

அப்போது அச்சந்தேக நபர்களின் பெயர்களை வெளியிடுமாறு சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் கேட்டபோது இன்ஸ்பெக்டர் அதற்கு மறுப்பு தெரிவிக்க பொலிசார் அப்படி மறுக்கமுடியாதென்றும் அதுபற்றி நீதவானுக்கு அவர்கள் அறிக்கையொன்று சமர்ப்பிக்கவேண்டுமென்றும் அவர் கூறினார்.

இம்மாதம் 20-ம் திகதிவரை விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (புலோ. நி]

---

## சிங்களவரை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறினார். திரு. சம்பந்தன் சிங்கள மகாஜன பெரமுனை, பௌத்த [வாலிபர் இயக்கம் போன்றவற்றின் சட்டத்தரணிகளால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

அரசாங்கத்தில் திரு. தேவநாயகம், திரு. தொண்டமான் ஆகிய இரு தமிழர்கள் மந்திரிகளாக இருப்பதால் சிங்கள ஆட்சி நடைபெறவில்லையென்றுகூறமுடியாது, 1970ம் ஆண்டில் ஆட்சிக்குவந்த அரசாங்கம் புது அரசியல் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தது. அதில் தமிழர்களின் அடிப்படை உரிமைகளையெல்லாம் அது உதாசீனம் செய்தது. இவ்வாறு சகல விதத்திலும் உரிமைகளைப் பெறமுடியாமல் போனதின் காரணமாகமாகவே தமிழர் விடுவிதலைக்கூட்டணி உருவாக்கப்பட்டது. தமிழ்ஈழவிடுதலை கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதன் மூலமே தமிழர் தம் கலை கலாசாரங்களை பேணமுடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இவ்வாறு திரு. சம்பந்தன் கூறினார்.

ஆகஸ்ட் கலவரத்தின்போது திருகோணமலையில் ஊரடங்கு அமுலில் இருந்தபோது வழங்கப்பட்ட பாஸ்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும் இவ்வாறு பாஸ்கள் பெற்றவர்களே கலவரங்களுக்குக் காரணமாக இருந்தனரென்றும் திரு. சம்பந்தன் முன்பு தமது சாட்சியத்தில் கூறியிருக்கிறாரென்றும், அச்சமயத்தில் திருகோணமலையில் அரசாங்க அதிபராயிருந்த சிரில் லியனகே என்பவரே இந்த பாஸ்களை வழங்கியவரென்றும் அவரைக் கமிஷன் மூன் சாட்சியமளிக்க அழைக்கவிருப்பதாகவும் அரச சட்டத்தரணி திரு. தென்னக்கூன் கமிஷனிடம் நேற்று அறிவித்தார். [ம]

---

யாழ்.நகரில் நேற்று

# திடீர் தீவிபத்தில் 6 வீடுகள் சாம்பல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கைவங்கிக் கிளைக்காரியாலயத்துக்கு பின்புறத்தில்அமைந்திருக்கும்6ஓலை வீடுகள் திடீரென ஏற்பட்ட தீவிபத்தினால் நேற்று எரிந்து சாம்பலாகின

எரிந்த வீடுகளில் இருந்து ஒருசில பொருட்கள் மட்டுமே மீட்கப்பட்டன. இச்சம்பவத்தினால் சுமார் 35,000 ரூபா வரை நஷ்டமேற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

சமையல் செய்துகொண்டிருந்தபோது ஒரு வீட்டில் நெருப்புச்சுவாலையொன்று கூரையில் பற்றியதுடன், காற்றின் வேகத்துடன்அடுத்தடுத்த வீடுகளுக்கும் தீபரவத்தொடங்கியதாம்.

சம்பவத்தை அறிந்த யாழ். பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. குலசிங்க தலைமையில் சுமார் 25 பேர் கொண்ட பொலிஸ் கோஷ்டி தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. பொலிசார் மூன்று தீயணைக்கும் வாயுக்கருவிகளை பயன்படுத்தி மற்றைய இடங்களுக்கு தீபரவாமல் தடுத்தனர்.

பொதுமக்கள் திரளாக திரண்டுவந்து ஒருகிணற்றில் நீர் வற்றும்வரை இறைத்து தீயை அணைக்க ஒத்துழைத்தனர்.

யாழ்.மாநகரசபை 'வவுசர் மூலம்நீர்வழங்கிதீயைஅணைக்க முயன்றனர். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு யாழ். விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானமும், யாழ். இராணுவ அதிகாரிகளும் சென்று நிலைமையை அறிந்து வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு ஆறுதல் கூறினர். (கெ)

---

## பெண்கள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விழாவில் செயல்பாடுகள் இல்லாததைக் கண்டுநாம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிப்பதுடன் கண்டனமும் தெரிவிக்கின்றோம். (உ)


Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
7 GOLDEN WOMEN
(Adults only)

வெஸ்லி (காங்கேசன்துறை) தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர்-ஜெய்சித்ரா
பணக்காரப்பெண்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
ரகுநாதன் - சந்திரகலா
தெய்வம்தந்தவீடு

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
என்.டி.ராமராவ்-அஞ்சலிதேவி நடித்த
பட்டி விக்கிரமாதித்தன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - தேவிகா நடித்த
வாழ்க்கைப்படகு
[புதிய பிரதி]

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் 148-வது தினமாக
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்ப்பாணம்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன், ராஜஸ்ரீ, மனோகர்,
அனுபவம் புதுமை
மர்மம் ஹாஸ்யம் புதிய பிரதி

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
ஆ ல ய ம ணி
(புதியபிரதி)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தேன்சிந்துதே வானம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி ... சாவித்திரி ... பாலையா
சந்திரபாபு ... தங்கவேலு நடித்த
காத்தவராயன் (புத்தம்புதியபிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30 P. m.
20th Century Fox Present
Richard Harris in
BLOOM FIELD
(colour)

ராஜா (யாழ்.நகர்) தினசரி:10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

விவசாய விழாவில் ஜனாதிபதியுடன் சேர்ந்து

# தமிழ், சிங்கள, முஸ்லிம் விவசாயிகள் உழுவார்கள்

(கொழும்பு)

அனுராதபுரம் இசுருமுனிய ரஜமகா விகாரைக்கு முன்னுள்ள வயலில் நடைபெறவிருக்கும் விவசாய விழாவில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த 50 விவசாயிகளும் ஏர்பூட்டி வயலில் உழுவார்கள்.

65 ஏக்கர் நிலத்தைக் கொண்ட இந்த வயல்பகுதியில் விவசாயம் செய்யவிருக்கும் விவசாயிகளுக்கு ஜனாதிபதி விதைநெல், உரம் போன்றவற்றை இலவசமாக வழங்குவார்.

எளிமையான முறையில் பாரம்பரிய சம்பிரதாயத்துக்கமைய நடைபெறவிருக்கும் இந்த விழாவின் செலவு முழுவதையும் அப்பகுதி மக்களே பொறுப்பேற்றுக்கொள்ளவிருக்கிறார்கள்.

விழாவின்போது ஜனாதிபதி திரு. ஜயவர்த்தன நாட்டுமக்களுக்கு உரைநிகழ்த்துவார். (ம)

## பரத நாட்டிய அரங்கேற்றம்

(பண்டத்தரிப்பு)

பிரபல நடனமேதை திரு. தொம்மைகுட்டி அவர்களின் மாணவியும் குரும்பசிட்டி (கவிஞர்) வி. கந்தவனம் தம்பதிகளின் புதல்வியுமான செல்வி வாணியின் பரதநாட்டிய அரங்கேற்றம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்வர்.

## தந்திகம்பிதிருட்டு; இருவர் சிக்கினர்

### கருவி காட்டிக்கொடுத்தது

[யாழ்ப்பாணம்[

வடபகுதியில் நடைபெற்று வரும் தந்திக்கம்பி திருட்டை தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக கையும் மெய்யுமாக இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ள கருவியின் சமிக்கை மூலம், இத்திருட்டுக்களை அம்பலப்படுத்தியுள்ளனர். இதற்காக இரவுவேளைகளில் நிரந்தர உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய கருவி மூலம் தந்திக் கம்பிகளை திருடர்கள் வெட்டும் போது உடனடியாக சமிக்கைகள் அறிவிக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக பொலிசாரின் கவனத்திற்கு கொண்டுவந்து திருடர்களை கைதுசெய்வர்.

கடந்த வெள்ளிக்கிழமை இக்கருவிமூலம் வல்வெட்டித்துறை, அல்லைப்பிட்டி, தச்சன் தோப்பு ஆகிய இடங்களில் இடம்பெற்ற திருட்டுக்கள் அம்பலமாகின. வல்வெட்டித்துறை, பொலிசார் வல்லை வெளியில் இடம்பெற்ற தந்திக் கம்பி திருட்டைக்கண்டு பிடிக்கச் சென்றபோது கள்வர்கள் வெட்டிய கம்பியை விட்டு ஓட்டம் பிடித்துவிட்டனர். யாரும் கைதுசெய்யப் படவில்லை. ஊர்காவற்றுறை பொலிசார் அல்லைப்பிட்டியில் இருவரைக் கைது செய்தனர். சாவகச்சேரிப் பொலிசார் தச்சன்தோப்பில் தந்திக் கம்பிகளை வெட்டும் முயற்சியில் ஈடு பட்டிருக்கும் முயற்சியில் ஈடு பட்டிருக்கும் போது பொலிசாரைக் கண்டதும் கள்வர் தப்பி ஓடிவிட்டனர்.

இம்முயற்சி பெருவெற்றியளிக்குமென யாழ்ப்பாணம் தபால் தந்திப்பகுதி அத்தியட்சகர் எமது திருபரிடம் தெரிவித்தார். (கெ)

## இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

(புலோலி)

இலங்கை மின்சாரசபையின் பருத்தித்துறைக் கிளை நெல்லியடிக்கு இடமாற்றஞ்செய்ததற்குப் பலத்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, வராத்துப்பளையில் இதுவரை காலமும் இயங்கிவந்த இம்மின்சார சபைக் கிளை திடீரென இடமாற்றஞ் செய்யப்பட்டதால் இப்பகுதி மின்சாரப் பாவனையாளர்கள் மட்டுமன்றிப் பல அரச திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும் பாதிக்கப்பட்டுள்ளனவாம்.

எனவே தொடர்ந்தும் பருத்தித்துறையிலேயே இக்கிளை செயல்பட நடவடிக்கை எடுக்குமாறு சகல மின்சாரப் பாவனையாளர்களும் மேலிடத்திடம் கேட்டுள்ளனர். (அ)

## சிறுமி பலாத்கார வழக்கில் பிக்கு பிணையில் சென்றார்

(சிலாபம்)

ஆறு வயதுச் சிறுமி ஒருவரைப் பலாத்காரம் செய்தார் என்ற புகாரின்பேரில் றிமாண்டில் வைக்கப்பட்ட பிக்கு ஒருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சிலாபம் மாவட்ட நீதிபதி திரு. வால்டர் விஜயரத்தின முன்னிலையில், சந்தேக நபரான பிக்கு ஆஜர் செய்யப்பட்டார்.

"சமய அங்கி அணிந்திருப்பவர்கள் மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும். உமக்கு எதிரான புகார் உண்மையாக இருக்கலாம், அல்லது பொய்யாக இருக்கலாம். ஆனால் நீர் கவனமாக இருந்திருந்தால் இப்படியான புகார் வந்திருக்காது' என்று நீதிபதி பிக்குவிடம் தெரிவித்தார்.

இரு வாரங்கள் றிமாண்டில் இருந்ததால், பிணையில் செல்ல அனுமதிப்பதாகக் கூறிய நீதிபதி மக்கள் ஆத்திரமடைந்திருப்பதால் மீண்டும் அந்தக் கிராமத்திற்குச் செல்லவேண்டாமென ஆலோசனை கூறினார்.

தான் வேறு ஒரு கிராமத்திற்குச் சென்றுவிட்டு அடுத்த தவணைக்கு நீதிமன்றம் வருவதாக பிக்கு தெரிவித்தார்.

சித்தசுவாதீனமுற்றிருப்பதற்காக சிகிச்சை பெற்றுவருவதற்கான டாக்டரின் அத்தாட்சிப்பத்திரம் ஒன்றை பிக்கு நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த பத்திரத்தைப் பார்வையிட்ட நீதிபதி, தொடர்ந்து சிகிச்சைபெறுமாறு கூறி இம்மாதம் 24 ம் தேதிக்கு வழக்கைப் பின்போட்டார், (க-அ)

## 1000 ரூபா பிணையில் அனுமதி

(பண்டத்தரிப்பு)

13 வயது சிறுவனிடமிருந்த சைக்கிளை அடித்துப் பறித்துக் கொண்டு ஓடியதாகச் சுன்னாகம் பொலிசாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தேவபாலன் என்பவரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு. எஸ். ஆனந்த குமாரசாமி அவரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மறுவிசாரணையை அடுத்த மாதம் 23-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். புன்னாலைக் கட்டுவனைச்சேர்ந்த நன்னித்தம்பி குமார் என்னும் பிரஸ்தாப சிறுவனிடமிருந்து சைக்கிள் வண்டியை பறித்ததாக மேற்படி வாலிபர் மீது குற்றம் சாட்டப்படிருந்தது. சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு ஆஜரானார். (அ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as Newspaper in SriLanka.

## 2 போட்டிகளில் பரியோவான் வெற்றி

([யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் பரியோவான் கல்லூரி ஹாட்லிக் கல்லூரியை 1-0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

இரண்டாம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி பரியோவான் கல்லூரியை 3:2 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டிகள் யாவும் பரியோவான் கல்லூரி மைதானத்திலேயே நடைபெற்றன, இவற்றுக்கு நடுவர்களாக முறையே திரு. ஏ. மாட்டீன், திரு. ஏ. பிலேந்திரன், திரு பி. நடராசா ஆகியோர் கடமையாற்றினர்.

## ஒஸ்மானியா வெற்றி

(யாழ்ப்பாணம்)

ஒஸ்மானியாக் கல்லூரிக்கும் யாழ் மத்திய கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான விளையாட்டுப் போட்டியில் ஒஸ்மானியாக் கல்லூரி யாழ். மத்திய கல்லூரியை 6-0 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதற்கு நடுவராக திரு. எம். எட்வேட் கடமையாற்றினர் (இ)

## மின்சாரநிலைய வீதி பால வேலை துரிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் நவீன மார்க்கட்டுக்கு எதிரில் உள்ள பால வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

ஆகஸ்ட்மாத முற்பகுதியில் அப்பாலத்தில் வெடிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அப்பாதைப் போக்குவரத்துதடை செய்யப்பட்டது

முறையாக வேலைமதிப்பீடு செய்யப்பட்டு டெண்டர் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டதாகவும், விரைவில் இந்த வேலை பூர்த்தியாகும் என்று ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்தார். (க-அ)

## நாவற்குழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இம்மாதம் 20ம் திகதியளவில் ஐந்து வீடுகளும் வீடமைப்பு இலாகாவிடம் கையளிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

ஐந்துவீடுகளுக்கும் ஒரே சின்னறு வசதியுள்ளதால், சிறுபான்மைத்தமிழர்களிடம் வலுவான ஒற்றுமையை ஏற்படுத்துமுகமாக ஐந்து வெவ்வேறு சிறுபான்மை சமூகத்தவரை குடியேற்றி தீண்டாமையை ஒழிப்பதற்கு மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் சேனாதிராசா

நயினாதீவைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் சேனாதிராசா அவர்கள் 11-10-78 புதன்கிழமை கொட்டடியில் காலமானார். இவர் சேனாதிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றசுப்பிரமணியம், கொட்டடி நமசிவாய வித்தியாசாலை ஆசிரியை பூமகள், தங்கம்மா, வைத்தீஸ்வர வித்தியாசாலை ஆசிரியை இலெட்சுமி, கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை உதவி டாக்டர் மீனாட்சி, யாழ். உதவி அரசாங்க அதிபர் காரியாலய உத்தியோகத்தர் நாகம்மா, வீமன்காமம் மகா வித்தியாலயம் ஆசிரியை சொர்ணம்மா, கொழும்பு வரதன் றேடர்ஸ் இராமநாதன், ஓமானில்கடமையாற்றும் பொன்னம்பலம், ஜானகி ஆகியோரின் அன்புத்தாயாரும் திருமதிபரமேஸ்வரி, கொழும்பு சிவரஞ்சினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் நடராசா, நயினாதிவு ரூபா கபே உரிமையாளர் சிவபாதம், யாழ். எலக்ரிக்கலஸ் உரிமையாளர் தியாகராசா, கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை உதவி டாக்டர் சின்னத்தம்பி, 'வவுனியா விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர் சந்திரன், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை உத்தியோகத்தர் மகேஸ்வரநாதன், நயினாதிவு சுந்தரலிங்கம் ஆகியோரின் அருமை மாமியாருமாவர். அன்னாரது ஈமைக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உறவினரும்நண்பர்களும் இவ்வறிவித்தலை தயவுகூர்ந்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

கே. ஆர். நடராசா

52, ஆஸ்பத்திரிவீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

0561

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் தம்பையா சங்கானை

சங்கானை பிரதான வீதியைச் சேர்ந்த நமசிவாயம் தம்பையா அவர்கள் 11-10-78 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், சங்கானை மாக்கற் N. T. R. ஸ்தாபனத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகர்களான ந. த. இராசரத்தினம், ந. த. நடராசா, ந. த. செல்வரத்தினம், சிவபாக்கியம், இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலம்சென்ற சபாபதிப்பிள்ளை. வல்லிபுரம், தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாக்கியம், சரஸ்வதி, வயித்திலிங்கம், அருந்தவராசா ஆகியோரின் மாமனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (12-10-78) வியாழக்கிழமை 1 மணியளவில் ந. த. இராசரத்தினம் இல்லத்தில் நடைபெறும். தகனக்கிரியை வழுக்கையாற்று மயானத்தில் இடம் பெறும்.

தகவல்: ந. த. இராசரத்தினம்

0560